விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 354 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 22 வெள்ளிக்கிழமை (08.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## வடக்கு - கிழக்கு மக்களுக்கு தீர்வொன்றை வழங்குங்கள்

சஜித் பிரேமதாஸ கோரிக்கை

11 பக்கம் பார்க்க



## 900 மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி

அமைச்சர் மனுஷ

7 பக்கம் பார்க்க



## யாழ். மாவட்டத்தில் டெங்கு அதிகரிப்பு

சத்தியமூர்த்தி

6 பக்கம் பார்க்க

HUMAN RIGHTS WATCH


## இனப் பிரச்சினையை அரசாங்கம் ஆழமாக்குகின்றது

மனித உரிமை கண்காணிப்பகம்

3 பக்கம் பார்க்க

# தமிழர்களின் உரிமையை இந்தியா பாதுகாக்கும்

## ஜெய்சங்கர் தெரிவிப்பு



(புதுடில்லி)

தமிழ் மக்களின் உரிமையை பாதுகாக்க இந்தியா தொடர்ந்து ஒத்துழைக்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் விடயம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

15

## தனியார் துறையினரின் சம்பளத்தை அதிகரிக்க

### வேலைத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

தனியார் துறையினரின் ஊதியத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்

15

## ராஜபக்ஷக்களை பாதுகாக்க மாட்டேன்

### விமர்சனங்களுக்கு ரணில் பதிலடி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நோக்கம் எனக்கு இல்லை. அதேவேளை, ராஜபக்ஷக்களை பாதுகாக்க வேண்டிய

15

சர்வதேச நீதிமன்றில்

## ராஜபக்ஷக்களை நிறுத்த வலியுறுத்தி கையெழுத்து சேகரிப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷக்களை சர்வதேச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த கோரி பொது மக்களின் கையொப்பங்களை சேகரிக்கும் நிகழ்வொன்று கொழும்பு, புறக்கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது மக்கள் போராட்டத்தின் குடிமக்கள் என்ற அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டு நேற்று இடம்பெற்றிருந்தது.

இலங்கை பொருளாதார ரீதியில்

15

## நினைவேந்தலை தடுக்க முடியாது; புலிச்சின்னம் பயன்படுத்தினால் சிறை

### நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ



(கொழும்பு)

போரில் உயிரிழந்த உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவேந்தும்போது அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், நினைவேந்தல் என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னங்களைப் பயன்படுத்துபவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள் என நீதி அமைச்சர்

15

## புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ரணிலை சந்திக்கவுள்ளதாக தகவல்

(கொழும்பு)

உலக தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

நல்லிணக்க செயல்முறைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவும் வகையில் சுரேன் சுரேந்திரன் தலைமையிலான குழுவே இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடன் சுரேன் சுரேந்திரன் குழுவினர் சந்தித்து கலந்துரையாட உள்ளனர்.

அத்துடன், அஸ்

15

## சாவகச்சேரியில் ஷெல் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தினுள் நேற்று வியாழக்கிழமை வெடிக்காத நிலையில் உக்கிய மோட்டார் ஷெல் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

சந்தை வளாகத்தில் அபிவிருத்தித் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்காக மணல் அகழ்ந்த

15

## முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் காணாமல்போன மோ.சைக்கிள்

### காலி நீதிமன்றில் 14 வருடங்களுக்குப் பின் உரிமையாளர் மீது வழக்குத் தாக்கல்

(காலி)

முள்ளிவாய்க்காலில் இறுதிப் போரின்போது காணாமல் போயிருந்த மோட்டார் சைக்கிள் 14 ஆண்டுகளின் பின்பு கடத்தல் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டுள்ள நிலையில் கிளிநொச்சியைச் சேர்ந்த உரிமையாளர் ஒருவருக்கு நேற்று முன்தினம் காலி நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

ஒரு கிலோவிற்கும் அதிகளவான ஐஸ் போதைப்பொருள் மற்றும் பணத்துடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் உள்ள பிரபல போதைப் பொருள் வர்த்தகரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான மாத்தறை கல்ப என்பவருடன் தொடர்புடைய இந்நாட்டு போதைப் பொருள் வர்த்தகத்திற்கு தலைமை தாங்கும் குடு தனு என்ற பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அங்கொடை குடா புத்கமுவ பிரதேசத்தில் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போதே இந்த பெண் கைதானார். (ம-7)

# மரண வீடொன்றில் வர்த்தகர் கொலை

(கொழும்பு)

சீதுவ - லியனகேமுல்ல பிரதேசத்தில் உள்ள மரண வீடொன்றுக்கு முன்பாக சூதாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபர் ஒருவர் நேற்று காலை கூரிய மன்னா கத்தியால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக சீதுவ பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சம்பவத்தில் தொம்மகே எரோசன் ரஜீந்திர பெர்னாண்டோ என்ற 46 வயதான, வர்த்தகர் ஒருவரே உயிரிழந்தார்.

இவர் மீது நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் இரண்டு கொலை வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும், இரவு வேளைகளில் மரண வீடுகளில் பணத்திற்காக சூதாட்டத்தில் ஈடுபடும் நபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 01.30 மணியளவில் சீதுவ, லியனகேமுல்ல பிரதேசத்தில் உள்ள மரண வீடொன்றிற்கு முன்பாக சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த இவரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் கூரிய மன்னா கத்திகளால் தாக்கியுள்ளனர்.

கொலைச் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நீர்கொழும்பு நீதவான் நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன், சடலம் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பேராசிரியர் யோகராசா காலமானார்



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் செ.யோகராசா நேற்று கொழும்பில் காலமானார்.

வடமராட்சி கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் செ.யோகராசா கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராக இருந்து கிழக்கிலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்.

இவர் சர்வதேச நாடுகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் கலந்துகொண்டு பல ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்த பெருமைக்குரியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)


**தேவை**

யாழில் இயங்கும் பிரபல நகைக்கடைக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்பு : (18141)

**077 882 8638**

**கனடாவில் வேலைவாய்ப்பு**

மற்றும்

**TOURIST விசா தேவைப்படுபவர்கள்**

உடன் தொடர்பு கொள்ளவும்.

- 5-18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான Student விசாவும் பெற்றுத் தரப்படும்.
- பாதுகாவலர்களுக்கும் 10 வருட விசா பெற்றுத் தரப்படும்.

விண்ணப்பிக்க இன்றே அழையுங்கள்.

**Hybrid international hub (pvt)ltd.**

யாழ்ப்பாணம்

(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

(C-7839)

தொடர்புகளுக்கு

**077 815 5920, 076 250 0098, 021 222 1265**

**பொருளியற் கல்லூரி**

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். K.K.S. வீதி, சுன்னாகம்.

**BARATHY** சித்தன்கேணி

(எமது மூன்று நிறுவனங்களிலும்)

யாழ். மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்களின் சேவையில்

(C-7843)

**A/L 2025**

**கலை வர்த்தகம்**

புதிய பிரிவு நாளை ஆரம்பம்

09.12.2023 சனிக்கிழமை

| | |
|---|---|
| பொருளியல் | R.தர்ஷன் |
| கணக்கீடு | S.திருக்குமரன் |
| வணிகக்கல்வி | S.பிரதீபன் |
| ICT | R.சுதர்ஷன் |
| | T.தேவதாசன் |
| | S.N.விது |
| தமிழ் | N.சத்தியவேந்தன் |
| இந்துநாகரிகம் | P.ஜோதீஸ்வரன் |
| | A.மேனன் |
| புவியியல் | P.S.குமரன் |
| அரசியல் | S.கோகுலன் |
| வரலாறு | K.சுதன் |
| ஊடகவியல் | N.கஜிதரன் |
| அளவையியல் | S.சயந்தன் |
| | N.ஜெயசுரேஸ் |
| | E.S.பவன் |
| இந்துசயம் | S.முகுந்தன் |
| நாடகம் | P.கணேஷ் |
| சித்திரம் | S.சபேசன் |
| சங்கீதம் | S.குமுதினி |
| மனை பொருளியல் | S.றஜிதா |

புதிய அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும் நேர அட்டவணை தொடர்புகளுக்கு

யாழ்.நகர் - 077 220 9651

சுன்னாகம் - 075 916 0417

சித்தன்கேணி - 077 940 8682

மேலதிக தொடர்பு - 077 376 3511


## மரண அறிவித்தல்

### திருமதி செல்வநாயகி பஞ்சரட்ணம்

**(செல்வி அக்கா)**

**(முன்னைநாள் முகாமையாளர் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**



பிறப்பு : 30.04.1947 | இறப்பு : 07.12.2023

காரைநகர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் தொண்டமான்நகர் 155ம் கட்டையில் வசித்து வந்தவருமாகிய திருமதி செல்வநாயகி பஞ்சரட்ணம் (செல்வி அக்கா) (முன்னைநாள் முகாமையாளர் - கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) அவர்கள் நேற்று (07.12.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற பஞ்சரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பழனிசெல்லையா - லக்கிபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் ஜெயரட்ணம் (சிவா என அழைக்கப்படும் கீதன்) கௌரி, கெங்கா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பார்வதி, புவனேஸ்வரி, செல்வராணி (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்), காலஞ்சென்ற சரஸ்வதி, காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் சகோதரியும் ராதா (ஆசிரியர்-முருகானந்தா கல்லூரி), சுதன் (கனடா), சுயா, காலஞ்சென்ற கஜன் ஆகியோரின் பெரியதாயும் கலைவாணி (ஆசிரியர் - இந்துக் கல்லூரி), சிவசோதி (முன்னாள் குமரன் ஹாட்வெயார்), காலஞ்சென்ற சிவகுமாரன் (முன்னாள் குமரன் புடவையகம்), விமலநாதன் (குமரன் பல்பொருள் வாணிபம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கஜீபன் (மருத்துவ பீட மாணவன் - கொழும்பு பல்கலைக்கழகம்), கார்த்திகன் (உயர்தர மாணவன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்), கனிநிலா (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), டினோஷா (கணக்காளர் - லண்டன் நிறுவனம்), பவிதா (தொழிநுட்ப கல்லூரி), வினோதன் (கனடா), பிருந்தா (லண்டன்), தர்சிகா (லண்டன்), ஆதீபன் (பயிலுநர் - மக்கள் வங்கி, கிளிநொச்சி), டினேஷ் (தொழில்நுட்பபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சுஜந்தன் (கனடா), சோபனன் (கிளி/இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இராசதுரை (CTB ரைவர்), காலஞ்சென்ற விநாயகர் மூர்த்தி (மகாஜனா ஸ்டார்ஸ்), காலஞ்சென்ற சோமசேகரம்பிள்ளை (முகாமையாளர் -ஓட்டு கம்பனி கண்டாவளை), அம்பலவாணர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2023) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லமாகிய இல.930, திருநகர் வடக்கில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல.930, திருநகர் வடக்கு, கிளிநொச்சி. (C-7841)

தகவல்: குடும்பத்தினர்

தொ.பே: 077 425 2069


**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 3 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : (18141)

**077 882 8638**

**Happy Supermarket - உரும்பிராய்**

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 296/= (Max 2Kg) |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg கோதுமை மா | - 183/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 305/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430/= |
| 1 Kg அரிசி மா | - 194/= |
| 10Kg விஜிதா நாடு | - 1925/= |
| 400g அங்கர் பால்மா | - 1030/= ~~(1080/=)~~ |
| 750ml New V.S.P நல்லெண்ணை | - 1300/= ~~(1400/=)~~ |
| 70g Baby Soab | - 112/= ~~(145/=)~~ |
| 400g sustagen சஸ்ரயன் | - 3435/= ~~(3900/=)~~ |
| 330g டிகிறி மாறி பிஸ்கட் | - 262/= ~~(330/=)~~ |
| 180ml Chik Shampoo | - 370/= ~~(480/=)~~ |
| 330g கோல்ட் மாறி பிஸ்கட் | - 275/= ~~(330/=)~~ |

3435/=




~~3900/=~~

(18143)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

Happy Supermarket

0777 8080 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையை ஆழமாக்கும் விதத்தில் இலங்கை அரசாங்கம் செயற்படுகிறது

## மனித உரிமை கண்காணிப்பகம் சாடல்

**(கொழும்பு)**
**1983 முதல் 2009 வரையான உள்நாட்டு போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தமைக்காக இலங்கை அதிகாரிகள் நாட்டின் துஷ்பிரயோக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 9 தமிழர்களை தடுத்து வைத்துள்ளனர். இந்தச் சட்டம் நீண்டகாலமாக சிறுபான்மை சமூகத்தினர், சிவில் சமூக செயற்பாட்டாளர்களை தடுத்துவைத்து சித்திரவதை செய்வதற்கு பயன்பட்டுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் அமைப்பு தெரிவித்துள்ளது.**



இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவேந்திய தமிழர்களிற்கு எதிராக இலங்கை அதிகாரிகள் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தியமை ஈவிரக்கமற்ற துஷ்பிரயோகம் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான பிரதி இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரையும் அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அந்த சட்டத்தை நீக்கும் வரை அதனை பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும்.

இது அரசாங்கத்தின் தொடர்ச்சியான பாரபட்சத்தை எதிர்நோக்கும் சமூகத்தை மேலும் அந்நியப்படுத்தும்.

ஜனாதிபதி நல்லிணக்கம் குறித்து பேசுகின்றார். ஆனால் அவரது அரசாங்கம் இனப்பிரிவினைகளை மேலும் ஆழமாக்கும் விதத்திலேயே செயற்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் எதிரான உள்நாட்டு யுத்தம் பிரிவினைவாத ஆயுத அமைப்பின் தோல்வியுடன் 2009 இல் முடிவடைந்தது முதல் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்தவர்கள் யுத்தத்தில் உயிரிழந்தவர்களை தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவேந்துவதை தடுத்து வந்துள்ளன.

டிசெம்பர் 2ஆம் திகதி இலங்கையின் வடபகுதி முல்லைத்தீவின் பொலிஸார் 1984 ஆம் ஆண்டு ஒதியமலை தமிழ் கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டமையை நினைவேந்த முயன்றவர்களை தடுத்து நிறுத்தினர்.

உயிரிழந்தவர்களை இன, மத சிறுபான்மையினர் நினைவுகூருவதை தடுத்து நிறுத்துவது, மதநம்பிக்கை யின் வெளிப்பாடாக ஒன்று கூடுதல் ஆகியவற்றைத் தடுப்பது உரிமையை மீறும் செயல் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (நி-6)


## ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக வடிவேல் சுரேஷ்



(கொழும்பு)
ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பதுளை மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவான வடிவேல் சுரேஷ், இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நாட்டை வந்தடைந்தது மரெல்லா டிஷ்கவரி



(கொழும்பு)
மரெல்லா டிஷ்கவரி 02 என்ற சொகுசு ரக பயணிகள் கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது

ஆயிரத்து 274 பயணிகள் மற்றும் 718 பணியாளர்களுடன் அந்த கப்பல் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளது.

குறித்த கப்பலில் வருகை தந்தவர்களில் அதிகமானோர் ஜேர்மனியர்கள் மற்றும் இத்தாலியர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## இனிப்பு உணவுகள், பானங்களை அதிகளவில் உள்ளெடுக்கும் சிறார்கள்

### எச்சரிக்கை விடுக்கும் சுகாதார அமைச்சு

(கொழும்பு)
இலங்கையில் பாலர் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவை விட ஐந்து மடங்கு சீனி அடங்கிய உணவுகளை உட்கொள்வதாக தெரியவந்து ள்ளது.

சிறுவர்கள் மத்தியில் இனிப்புப் பானங்கள் மற்றும் சீனி உணவுகளின் பாவனை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் குருநாகல் மாவட்டங்களில் முன்பள்ளிச் சிறார்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இது தெரியவந்துள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (நி-6)

## வட-கிழக்கு முரண்பாடுகளுக்கு விதுரவே காரணம்

### சாணக்கியன் குற்றச்சாட்டு

(கொழும்பு)
வடக்கு மற்றும் கிழக்கில் இனவாத முரண்பாடுகளுக்கு விதுரவிக்கிரமநாயக்கவே கதாநாயகன் என தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டத்தில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு, புத்தசாசனம்,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சு மிக முக்கியமானது. இருப்பினும் இந்த அமைச்சு பற்றி பேசுவது பயனில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக பதவி வகித்துக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கில் இனவாத செயற்பாடுகளில் ஈடுபட்ட இவர் புத்தசாசன அமைச்சராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் கடும் இனவாதி. மலைகளை கண்டால் அவரால் இருக்க முடியாது. அங்கு ஓடிச் செல்வார். வெடுக்குநாறி மலை குருந்தூர் மலைக்கு ஓடி வந்தார். இனவாத முரண்பாடுகளை தோற்றுவித்தார். மட்டக்களப்பு மாவட்ட குசலான மலைக்கும் வந்தார். ஆனால் நாங்கள் அவரை அங்கு செல்ல விடவில்லை.

இனவாத செயற்பாடுகளுக்காகவே புத்தசாசனம் அமைச்சும் தொல்பொருள் திணைக்களமும் பயன்படுத்தப்படுகிறது.

தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளரை ஜனாதிபதி அண்மையில் பதவி விலக்கினார்.

உண்மையில் இனவாத முரண்பாடுகளின் கதாநாயகனாக உள்ள புத்தசாசன அமைச்சரை அவர் பதவி நீக்கியிருக்க வேண்டும். இவரை பதவி நீக்க தைரியம் இல்லாமல் பணிப்பாளர் நாயகத்தை பதவி நீக்கினார்.

ஜனாதிபதியுடன் பேசி பயனில்லை என்பதற்காக தற்போது சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம் என சாணக்கியன் தெரிவித்தார். (நி-6)

## தரத்தை உறுதிப்படுத்த ஈ-60 கொள்கை




(கொழும்பு)
நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைக் கொழுந்தின் தரத்தை உறுதிப்படுத்தி கொள்வதற்காக ஈ-60 கொள்கை ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினர்களுக்கு விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஈ-60 கொள்கை என்பது, தேயிலை உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இலைகளில் குறைந்தது 60 சதவீதம் உயர்தரத்தில் இருக்க வேண்டும் என்பதாகும்.

இந்நிலையில், ஏதேனும் ஒரு நிறுவனம் இதனை மீறினால் அவர்களின் உரிமத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை தேயிலை சபைக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார். (நி-6)

## மின் கட்டணம் குறையும்

### அமைச்சர் நம்பிக்கை



(கொழும்பு)
ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குள் மின் கட்டணம் குறையக் கூடும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த நாட்டில் என்ன நடந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். 13 மணிநேரம் மின்சாரம் துண்டிக்கும் நாடாக இருந்தது. எரிபொருட்களில் சிக்கல் ஏற்பட்டது.

அத்தியாவசிய மருந்துகளில் சிக்கல் ஏற்பட்டது. இப்போது நாடு படிப்படியாக நிலை பெற்று வருகிறது.

ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குள் மின் கட்டணம் குறையும் என நம்புகிறோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய-தென் ஆபிரிக்க போட்டி பரபரப்பு நிறைந்து இருக்கும்

### ஜாக்காலிஸ்



இந்தியா நல்ல அணியாக இருந்தாலும் தென் ஆபிரிக்காவை அதன் சொந்த மண்ணில் தோற்கடிப்பது மிகவும் கடினம் என முன்னாள் தென்ஆபிரிக்கா வீரர் ஜாக்காலிஸ் கூறியுள்ளார்.

இது குறித்து சமீபத்திய பேட்டியில் அவர் பேசியதாவது, "இது நல்ல இந்திய அணியாக இருக்கிறது. ஆனால் தென் ஆபிரிக்காவை அதனுடைய சொந்த மண்ணில் வீழ்த்துவது மிகவும் கடினம். இந்த டெஸ்ட் போட்டிகள் நடைபெறும் மைதானங்களில் ஒன்று தென் ஆபிரிக்காவுக்கும் மற்றொன்று இந்திய அணிக்கும் சாதகமாக இருக்கலாம். எனவே இத்தொடர் மிகவும் தரமானதாக இருக்கும். மொத்தத்தில் இந்த தொடர் மிகவும் பரபரப்பான போட்டி நிறைந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன் என கூறியிருந்தார்.

இந்திய அணி தென் ஆபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்து 3 ஒருநாள், 3 இருபது-20 மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையேயான முதலாவது இருபது-20 போட்டி நாளை மறுதினம் நடைபெற உள்ளது. (நி-6)





ஆண்கள் கிரிக்கெட் போட்டிக்கான இருபது-20 பந்து வீச்சாளர் தர வரிசைப் பட்டியலை நேற்று முன்தினம் ஐ.சி.சி வெளியிட்டது.

இந்த பட்டியலில் முதல் இடத்தில் நீடித்த ரஷித்கானை பின்னுக்கு தள்ளி இந்தியாவின் சுழற்பந்து வீச்சாளர் ரவி பிஷ்னோய் முதல் இடத்தை பிடித்துள்ளார். பிஷ்னோய் 699 புள்ளிகளுடன் முதல் இடத்தை பிடித்தார். ரஷித்கான் 692 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபது-20 தொடரில் 5 போட்டிகளில் விளையாடிய ரவி பிஷ்னோய் 9 விக்கெட்டுகளை வீழ்த்தி தொடர் நாயகன் விருதை தட்டிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பிஷ்னோய் அசத்தல் ரஷித்கான் சறுக்கல்

## அணியில் சேர்க்க விரும்பினால் சொல்லுங்கள்-பி.சி.ஐ யிடம் ரோகித்



இருபது-20 உல கக் கிண்ணத்தில் என்னை தேர்வு செ ய்ய விரும்பினால் இப் போதே சொல்லிவிடு ங்கள் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பி.சி. சி.ஐ) நிர்வாகிகள் மற் றும் தேர்வு குழுவின ரிடம் ரோகித்சர்மா தெரிவித்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இந்திய கிரிக்கெட் வாரிய நிர்வாகிகள் சமீபத்தில் ரோ கித்சர்மா , பயிற்சியாளர் ராகுல் டிராவிட் ஆகியோருடன் ஆலோசனை செய்தனர். அப்போது ரோகித்சர்மா லண்டனில் இருந்தமையால் காணொலி மூலம் பங்கேற்றார். அப்போது ரோகித்சர்மா இதை தெரிவித்ததாக பி.சி.சி.ஐ வட்டா ரங்கள் தெரிவித்தன.

இருபது-20 உலகக்கிண்ண போட்டி அடுத்த ஆண்டு ஜூன் 4 முதல் 30 வரை மேற்கிந்திய தீவு மற்றும் அமெரிக்காவில் நடக்கிறது. இந்த போட்டி யில் விராட்கோலியும், ரோகித்சர்மாவும் விளையாட வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது. அதே நேரத்தில் இளம் வீரர்களான சுப்மன் கில் ஜெய்ஷ்வால், இஷான் கிஷன், ருதுராஜ் கெய்க் வாட், ரிங்குசிங் ஆகியோர் அதிரடியாக விளையாடி வருகிறார்கள். இதனால் விராட்கோலிக்கும், ரோகித்சர்மாவுக்கும் இருபது-20 உலகக்கிண்ணப்போட்டியில் வாய்ப்பு கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில், இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை, இங்கிலாந்து அணி 1-1 என்ற கணக்கில் சமநிலை செய்தது.

ஆன்டிகுவா- சர்.விவியன் ரிச்சட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, 39.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 202 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து 203 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 32.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது. இதனால், இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள்போட்டி, நாளை மறுதினம் பார்படோஸ் மைதானத் தில் நடைபெறவுள்ளது. (நி-6)

## மேற்கிந்திய தீவுக்கு பதிலடி கொடுத்தது இங்கிலாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி, ரவைகளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

(கொழும்பு)

துருக்கி செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த விமான பயணி ஒருவர் நேற்று அதிகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை சூட்கேஸில் மறைத்து வைத்து வந்தவரே இவ்வாறு விமான நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொட பிரதேசத்தில் வசிக்கும் 59 வயதுடைய இவர் அதிகாலை 5.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அங்கு விமான நிலையப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் அவரது பயணப் பொதிகளை பரிசோதித்த போது துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். (நி-6)

# றைல்ஸ்களின் விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

றைல்ஸ் மற்றும் சுகாதாரப் பொருட்களின் இறக்குமதியை நீக்கியதால், டைல்ஸ் விலை 50% குறைந்துள்ளதுடன், றைல்ஸ் தேவையும் அதிகரித்துள்ளதாக றைல்ஸ் மற்றும் சானிட்டரி பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் ஜனவரி மாதம் முதல் றைல்ஸ் மீது வரி விதிக்கப்பட்டால், டைல்ஸ்களின் விலை 100% உயரலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமல்லாது இது குறித்து ஜனாதிபதி செயலகத்தில் மகஜர் ஒன்றையும் றைல்ஸ் மற்றும் சுகாதார பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் நேற்று கையளித்துள்ளனர்.

குறித்த மகஜரில் றைல்ஸ்களின் விலை வேகமாக வீழ்ச்சியடைந்து வரும் இவ்வேளையில் வற் வரியை அமுல்படுத்துவதன் மூலம் டைல்ஸ்களின் விலையை மீண்டும் 100% ஆக அதிகரிக்க முடியும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6)


# கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் தலைவர் திரு. **ஆ.சத்தியமூர்த்தி** அவர்களின் அன்பு மாமியார்

## திருமதி.தங்கரத்தினம் நடராசா



அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-7836)

வருத்தத்துடன் – கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும். (K.C.C.C & k.c.c.c.s.c)


# அரச நிறுவனங்கள் தொடர்பிலான வழிகாட்டுதல்கள் மிக விரைவில்

## மனித உரிமைகள் ஆணைக்குழு அதிரடி

(கொழும்பு)

அரச நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ், சிறைச்சாலை மற்றும் நன்னடத்தை நிலையங்கள் போன்ற நிறுவனங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என்றும் அதன் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஒருவர் கைது செய்யப்பட்ட பிறகு எப்படி செயற்பட வேண்டும், மனநலம் குன்றியவரை அனுமதிக்கும் போது அவருக்கு அளிக்கப்படும் பராமரிப்பு மற்றும் சிகிச்சை போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாளை மறுதினம் சர்வதேச மனித உரிமைகள் தினம் நினைவு கூரப்படும் நிலையில் டிசெம்பர் 11 ஆம் திகதி இந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என எதிர்பார்ப்பதாக நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார். (நி-6)






# இராசிபலன்

08.12.2023
கார்த்திகை 22, வெள்ளிக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 5.20 மணிவரை
அத்தம் காலை 8.18 மணிவரை

சுபநேரம் -6.17-7.47 மணிவரை
இராகுகாலம்-10.47-12.17 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்- உத்தரட்டாதி.

வளவன்



**மேஷம்** – புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.



**கடகம்** – பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**துலாம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்ப உறுப்பினரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, சுபவிரயங்கள் ஏற்படும் நாள்.



**மகரம்** – எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.



**ரிஷபம்** – குடும்பத்தினரின் பேரன்பை பெறுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



**சிம்மம்** – தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.



**விருச்சிகம்** – குடும்பத்தில் குதூகலம் கூடும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் பகை அகலும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.



**கும்பம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.



**மிதுனம்** – நண்பர்கள் மத்தியில் நல்லபெயர் கிடைக்கும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.



**கன்னி** – புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.



**தனுசு** – உறவினர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



**மீனம்** – தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாடு ஆனந்தம் தரும், வருமானம் திருப்தி தரும், கனவு பலிதமுண்டு, போசன சுகமுண்டு.

ஒரு அறிவாளி தனக்குள்ளேயே எல்லாவற்றையும் எதிர்பார்க்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களே அவதானம்!

# யாழில் அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்!

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி எச்சரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்தில் சில மருத்துவ அதிகாரி பிரிவுகளில் அதிகளவிலான பொதுமக்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்

3 நாட்கள் காய்ச்சல் மற்றும் தலைவலி மூட்டு மற்றும் தசைகளில் நோவு, வயிற்றுவலி, வாந்திபேதி போன்ற நோய் அறிகுறி காணப்படுமாயின் மருத்துவ ஆலோசனை பெற்று குருதி பரிசோதனை செய்து டெங்கு இல்லை என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

டெங்கு நோய் உறுதிப்படுத்தப்பட்டால் தகுதியான மருத்துவர்கள் அல்லது தாதியர்கள் உள்ள தொடர் மருத்துவ கண்காணிப்பு வழங்கக்கூடிய மருத்துவமனைகளில் அனுமதி பெற்று சிகிச்சை வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும் தகுதி பெறாத மற்றும் அனுமதிக்கப்படாத தொடர் கண்காணிப்பு இல்லாத மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படாது இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நோயாளர்களது உரிமைகள், நலன்பேணல் தொடர்பாகப் பொதுஅமைப்பு ஒன்று உருவாக்கப்பட உள்ளது. இதற்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். நாச்சிமார் கோயிலடி ராஜா கிறீம் ஹவுஸ் ஹம்சியா மஹாலில் நடைபெற உள்ளது. சமூக நோக்கம் கொண்ட ஆர்வமுள்ள அனைவரையும் இதில் பங்கேற்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)





## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ் ஆலய மஹோற்சவம் காலை, மாலை உற்சவங்களாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் இரவு 7 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் நடைபெறும். (நி-6-33)



நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் கும்பாபிஷேக பெருவிழாவிற்கான பந்தற்கால் நாட்டலும் யந்திர பூஜை ஆரம்ப நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

(படம்: சிவசாந்தன்)

# கொடிகாமத்தில் இளைஞன் மீது தாக்குதல் வீட்டு உடைமைகளையும் சேதமாக்கிய கும்பல்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளாம்போக்கட்டி ஜே/323 கிராம அலுவலர் பிரிவில் நேற்று முன்தினம் பிற்பகல் வீதியால் சென்ற இளைஞன் மீது வன்முறைக் குழுவொன்று தாக்குதல் நடத்தியதுடன் குறித்த இளைஞனின் வீட்டிற்குச் சென்று பெறுமதியான உடைமைகளை அடித்து நொறுக்கியதுடன் வீட்டில் இருந்த நகை,பணம் போன்ற பெறுமதியான பொருட்களையும் திருடிச் சென்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் தனது நண்பனுடன் மோட்டார்சைக்கிளில் வீடு நோக்கிச் சென்ற போது குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதேவேளை இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அடித்து சேதப்படுத்தியுள்ளது.

தாக்குதலில் இருந்து தப்பித்து இளைஞன் அருகில் உள்ள வீடு ஒன்றில் தஞ்சம் புகுந்த நிலையில் வன்முறைக் கும்பல் அந்த வீட்டின் முன்பாக பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கமராக்களையும் அடித்து சேதப்படுத்தியதோடு குறித்த இளைஞனுடைய வீட்டிற்கு சென்று வெளிக்கதவு, கண்ணாடிகள் மற்றும் பெறுமதியான பொருட்களை அடித்து சேதப்படுத்தியதுடன் வீட்டில் வைக்கப்பட்டிருந்த 7இலட்சம் ரூபாய் பணம் மற்றும் நகைகள் ஆகிய வற்றையும் திருடிக் கொண்டு மேற்படி கும்பல் தப்பித்துள்ளது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். காயப்பட்ட இளைஞன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30-33)



இலங்கை கடற்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று முன்தினம் காங்கேசன்துறை உத்தர கடற்படைத்தள மருத்துவமனையில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

(படம்: சிவசாந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 450 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 1000 | 1000 | 1200 |
| தக்காளி | 600 | 700 | 750 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 150 | 150 |
| கோவா | 350 | 380 | 400 | 500 |
| கரட் | 400 | 480 | 450 | 500 |
| பூசணி | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 300 | 280 | 220 | 350 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 240 | 200 | 350 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 550 | 350 | 400 | 450 |
| லீக்ஸ் | 300 | 380 | 350 | 400 |
| பீற்றூட் | 300 | 350 | 500 | 600 |
| கறிமிளகாய் | 600 | 800 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 2000 | 600 | 1600 |
| போஞ்சி | 550 | 550 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 400 | 380 | 480 | 450 |
| கீரை – 1 பிடி | 150 | 150 | 150 | 200 |
| தேசிக்காய் | 1000 | 600 | 800 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 450 | 450 | 550 | 400 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 150 | 180 | — | 160 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 100 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 180 | 150 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைமனுக் கோரல் (IFB)
## மாநகரசபை, யாழ்ப்பாணம்

JMC/PO2/DO/Chi.Eq/2023

01. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம், அவர்கள் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்களுக்காக கோருகின்றார்.

02.விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03.இவ் விலைமனுக் கோரலானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04.கேள்விதாரர்கள் குறித்த துறையில் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05.தேவையான தகைமைகள், மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை என்பன கேள்வித் தரவில் காட்டப்பட்டுள்ளது.

06.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றை ஆணையாளர், மாநகரசபை, பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலை நாட்களில் 08.12.2023 ஆம் திகதியிலிருந்து 21.12.2023 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1000.00 + VAT இனைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகவோ அல்லது வங்கிக் கட்டளை மூலம் செலுத்தப்படல் வேண்டும்.

07.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு ஆணையாளர்,மாநகரசபை,பருத்தித்துறை வீதி நல்லூர்,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 21.12.2023 ஆம் திகதி பி.ப 15.00 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08.சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| தொ.இல | கேள்வி இலக்கம் | வேலை விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | JMC/PO2/DO/Chi.Equ./2023 | **Children Park Equipment** | |
| | | 1.Spider Ferries wheel (Motor and Manual) | 01 |
| | | 2.Pumping Ladder | 02 |
| | | 3.Spring slider without stand | 01 |
| | | 4.Spring slider | 02 |

**தலைவர்,பெறுகைக்குழு, மாநகரசபை,யாழ்ப்பாணம்.** (சி-7833)


# 85 லட்சம் ரூபாய் பெறுமதியான பீடி இலைகள் கடத்தல்
## இருவர் கைது

(புத்தளம்)

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட பீடி இலைகளை கற்பிட்டி, ஏத் தாலை பகுதியிலிருந்து நாக வில்லு பகுதிக்கு கடத்த முற்பட்ட இருவரை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

பீடி இலைகளை கடத்திச் செல்வதாக தம்பபண்ணி கடற் படையினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கமைய, புத்தளம் தேத்தாப்பலைப் பகுதியில் வைத்து படையினர் கப்ரக வண்டியை மறித்து சோதனைக் குட்படுத்தியுள்ளனர்.

இதன்போது 41 உறைகளில் சுமார் 1230 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்ட தோடு, 2 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைதான இருவரும் புத்தளம் தில்லையடிப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைவர்கள் எனவும் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் சுமார் 85 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியானவை எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசா ரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடுகைதான சந்தேக நபர்கள் இருவரையும் புத்தளம் நீதி மன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர். (நி-6)


# நல்லூர் பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்டம்

நல்லூர் பிரதேசசபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரைபு வரவு-செலவுத்திட்டம் "1987 ஆம் ஆண்டு பிரதேசசபைகள் சட்டத்தின் 15 ஆம் இலக்க 168 ஆம் பிரிவிற்கமைய" தயாரிக்கப்பட்டு 08.12.2023 தொடக்கம் 15.12.2023 ஆம் திகதி வரை எமது தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் பொது நூலகங்களில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதுடன், இதனை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

**யு.ஜெலீபன்**
**செயலாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.** (சி-7834)



# யாழ்ப்பாணம் மாநகரசபை
## கழிவகற்றுதலுக்கான உழவு இயந்திரங்களை சாரதியுடன் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்விகள் கோரல்- 2024

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டார ஆதனங்களிலிருந்து வெளியேற்றப்படும் திண்மக் கழிவுகளினை வகை பிரித்து எடுத்துச் சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு சாரதியுடன் உழவு இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 08.12.2023 - 21.12.2023 ஆம் திகதிவரை சபையின் கொள்வனவுப் பகுதியுடன் தொடர்பு கொண்டு கேள்விக்குரிய கூறுவிலைப் படிவங்களினைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 21.12.2023 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு முன்னதாக பதிவுத் தபாலிலோ, நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்வி திறக்கும் திகதி: 21.12.2023 நேரம்: பிற்பகல் 03.00 மணி.

**ஆணையாளர்.** (சி-7835)



# யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்

**புதிய மாணவர்களை அனுமதித்தல் 2022/2023**

**உயர்தர தொழிற்றுறைப் பிரிவு**
**(13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம்)**

யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் பதின்மூன்று வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.இவ் விண்ணப்பப்படிவத்தினை பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி**
**22.12.2023** (சி-7832) **அதிபர்**


# 900 மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி

## அமைச்சர் மனுஷ நாணயக்கார



(கொழும்பு)

சுமார் 900 மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், இந்த மின்சார வாகனங்களை இறக் குமதி செய்யும் முறைக்கான கடன் கடிதங்களை விநியோகிப்பதில் சில நெருக்கடி ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

திறைசேரி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளினால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ள தாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

இதேவேளை வெளிநாட்டு ஊழியர்களால் நாட்டுக்கு 100 மில்லியன் டொலர்களுக்கு மேல் பணம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். (நி-6)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்
## யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
### தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு–2023



ஸ்ரீதுவாரகபாலகிருஸ்ணா
நிலாகரன்
**156** புள்ளி

Best Wishes

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

1. த.சாகித்தியா
2. த.சர்மினி
3. சோ.பிரியங்கா
4. சு.சனோச்
5. மு.ரிஷானி

**70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

1. ஜி.டன்சியா
2. ஓ.வைஷ்ணவி
3. ஜ.டக்ஷயன்

(16122)


2023 ஆம் ஆண்டு தேசிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேற்படி மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துவதுடன் அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம், யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## காலிஸ்தான் தீவிரவாதி மிரட்டல் எதிரொலி
### இந்திய பாராளுமன்றத்தை சுற்றிலும் பாதுகாப்பு அதிகரிப்பு



(டில்லி)
இந்திய பாராளுமன்றம் மீது தாக்குதல் நடத்தப் போவதாக காலிஸ்தான் தீவிரவாதி குர்பத்வந்த் சிங் பன்னு மிரட்டல் விடுத்துள் ளார்.

அமெரிக்கா மற்றும் கன டாவின் குடியுரிமை பெற்ற வர் குர்பத்வந்த் சிங் பன்னு. காலிஸ்தான் தீவிரவாதியும் தடை செய்யப்பட்ட 'நீதிக் கான சீக்கியர்கள்' அமைப் பின்தலைவருமான இவர் மிரட்டல் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் நரேந்திர மோடி அரசு தன்னை கொல்ல முயற்சிப்பதாகவும் இத ற்கு டிசெம்பர் 13 ஆம் திகதி பதிலடி கொடுக்கப் போவ தாகவும் எச்சரித்துள் ளார்.

டெல்லியில் உள்ள பாராளு மன்ற கட்டிடத்தின் மீது தாக் குதல் நடத்தப் போவதாக வும் இது இந்திய பாராளுமன் றத்தின் அடித்தளத்தையே அசைக்கும் என்றும் அவர் மிரட்டல் விடுத்துள்ளார். இந்த மிரட்டலை தொடர்ந்து பாதுகாப்பு அமைப்புகள் மிகுந்த விழிப்புடன் உள் ளன. (நி-6)

## வெனிசுவேலாவுடனான எல்லையில் துருப்புகளை நிறுத்தும் பிரேஸில்

(பிரேஸில்)
கயானாவின் எண் ணெய் வளம் நிறைந்த பகுதியை தங்கள் எல்லைக் குள் இணைக்கும் திட்ட த்தை வெனிசுவேலா அறி வித்ததை அடுத்து, வெனிசு வேலாவுடனான தனது எல்லையில் துருப்புக்களை நிலைநிறுத்துவதாக பிரேஸில் தெரிவித்துள்ளது.

கயானா பிரித்தானிய காலனியாக இருந்த 19 ஆம் நூற்றாண்டிலிருந்து எஸ்சிகிபோ பகுதி சர்ச் சையில் உள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு கடல் எண்ணெய் மற்றும் எரிவாயு இருப் புக்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் வெனிசுவேலா தனது நில உரிமை கோரல் களை புதுப்பித்தது.

வெனிசுவேலாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்பட் டதில் இருந்து பதற்றம் அதிகரித்து வருகிறது.

95 சதவீதத்துக்கும் அதி கமான வாக்காளர்கள் எஸ் சிகிபோ பகுதிக்கான அர சாங்கத்தின் கூற்றை ஆத ரித்ததாக கூறப்படுகிறது.

இதனிடையே, வெனிசு வேலாவின் ஜனாதிபதி நிக் கோலஸ் மதுரோ, அந்த பகு தியை வெனிசு வேலாவின் ஒரு பகுதியாக மாற்றுவதற் கான சட்டமூலத்தை தேசிய சட்டமன்றம் நிறைவேற்ற முன் மொழிந்துள்ளார். அத் துடன் மாநில எண்ணெய் நிறுவனத்துக்கு அங்கு எண் ணெயை பிரித்தெடுக்கும் உரிமங்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த நடவடிக்கை அப் பகுதி முழுவதும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. கயானா தனது துருப்புக்களை அதிக எச் சரிக்கையுடன் வைத்திருக் கும் அதே வேளையில், பிரே ஸில் இராணுவம் ரோரைமா மாநிலத்தின் தலைநகரான போவாவிஸ்டாவின் எல்லை நகருக்கு அதிக வீரர்களை நகர்த்துவதாகவும், மேலும் ஆயுதம் ஏந்திய வாகனங் களை கொண்டு வருவதா கவும் கூறியுள்ளது.

எவ்வாறாயினும், வெனி சுவேலாவின் எந்தவொரு இராணுவ ஊடுருவலும் தள வாட ரீதியாக சவாலானதாக இருக்கும். வெனிசுவேலா வீரர்கள் மற்ற இடங்களில் சவாலான நிலப்பரப்பு கார ணமாக எஸ்சிகிபோவிற் குள் நுழைந்தால் பிரேஸி லிய பகுதி வழியாக செல்ல வேண்டும் என்பது குறிப் பிடத்தக்கது. (நி-6)

## வளைகுடா நாடுகளுக்கு விளாடிமீர்புடின் விஜயம்

(மொஸ்கோ)
ஐக்கிய அரபு அமீரகம் மற் றும் சவுதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடி னுக்கு உற்சாக வரவேற்ப ளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத் தில், முழு குதிரைப்படை மற்றும் வாகன அணிவ குப்புடன் ரஷ்ய ஜனாதிபதி வரவேற்கப்பட்டார்.

அதேநேரத்தில், ரஷ்யக் கொடி வர்ணத்தில் தேசிய வான்வழி அக்ரோபாட்டிக்ஸ் விமானக் குழு, ரஷ்யாவை கௌரவப்படுத்தியது.

காசாவில் நடக்கும் போர் குறித்து விவாதிக்க ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை புடின் சந்திக்கவுள் ளதாக கிரெம்ளின் அதிகா ரிகள் அறிவித்துள்ளனர்.

பெப்ரவரி 2022இல் ரஷ்யா உக்ரைன் மீது படை யெடுத் ததில் இருந்து புடின், உக் ரைன், ஈரான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு மட் டுமே சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மீண்டும் உ...

## இஸ்ரேல்-...

### ஐ.நா எச்சரிக்...

(ஜெனிவா)

**தெற்கு நோக்கிய இஸ்ரேலின் தா... பெரிய அளவிலான மனித இடப்பெ... வகுக்கும் என ஐ.நா எச்சரித்துள்ளது...**



ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல் அதிகரித்து வரும் நிலையில், தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு பலியாகும் பாலஸ்தீனர்களின் எண் ணிக்கையும் அதிகரித்துள் ளது.

காசா பகுதியில் கடுமையான குண்டுவீச்சு தாக்குதலும், தரை வழித் தாக்குதலும் அதிகரித்துள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கான் யூனிஸ் நகரின் மையத்தில் இஸ்ரேல் இராணு வத்தினர் இருப்பதாகவும் தரை வழித்தாக்குதலைத் தெற்கு

## மதுபானங்களுக்கு அ...
## ஆரோக்கியமான மக்களை...

### உலக சுகாதார அமைப்பு வ...

World Health Organization

(ஜெனிவா)
மதுபானங்கள் மற்றும் சர்க்கரை இனிப்பு பானங்கள் மீதான வரிகளை அதிகரிக்க உலக நாடுகளை உலக சுகா தார அமைப்பு வலியுறுத்தியுள் ளது. இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு கூறியதாவது.

ஆரோக்கியமற்ற பொருட் கள் மீதான சராசரி உலக ளாவிய வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

# உக்கிரமடையும்

# -ஹமாஸ் போர்

## ரிக்கை

ன் தாக்குதல் மிகப்
டப்பெயர்வுக்கு வழி
ள்ளது.



நோக்கி விரிவுப்படுத்தவுள்ள தாகவும் இஸ்ரேல் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

காசாவிலிருந்து சுமார் 18.7 லட்சம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு இடப்பெயர்ந்துள்ள நிலையில் ஏற்கெனவே குறைவாகக் கிடைக்கும் உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ வசதி போன்றவை இந்தத் தாக்குதல் காரணமாக மேலும் பாதிக்கும்.

பாலஸ்தீனர்கள் தஞ்சம் அடைந்துள்ள பகுதிகளிலும், காசா முழுவதும் இஸ்ரேலின் குண்டுவீச்சுத் தாக்குதல் கடுமையாக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா தெரிவித்துள்ளது.


இந்தப் போரில் இதுவரை பலியான பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 16,200 எனவும் காயமுற்றோர் எண்ணிக்கை 42 ஆயிரத்துக்கும் அதிகமாக உள்ளது எனவும் காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, போர் நிறைவுடைந்ததன் பின்னர் காசாவின் பாதுகாப்புக் கட்டுப்பாடு இஸ்ரேலிடம்தான் இருக்கும் எனக் குறிப்பிட்டது, மறைமுகமாக காசாவை மீண்டும் இஸ்ரேல் ஆக்கிரமிக்கும் திட்டத்தின் வெளிப்பாடாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கான் யூனிஸ் நகரத் தாக்குதலுக்குப் பிறகு தெய்ர் அல்-பலா நகரத்தை நோக்கி இஸ்ரேல் இராணுவம் முன்னேறி வருகிற நிலையில், 150இற்கும் அதிகமான டாங்கிகளும் கவச உடை அணிந்த காவலர்கள் வாகனங்களில் அந்த வழியில் பயணிப்பதையும் செயற்கைகோள் எடுத்த படங்கள் மூலமாக காண முடிகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரைவழி தாக்குதலின் மூன்றாவது கட்டத்தில் இருக்கும் இஸ்ரேல் வான்வழியிலும் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக ஐ.நா மனிதநேய விவகார அலுவலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஹமாஸ் தலைவரின் வீட்டை சுற்றிவளைத்துள்ள இஸ்ரேல் படை



(ஜெருசலேம்)

ஹமாஸ் அமைப்பின் தலைவர் யஹ்யா சின்வாரின் வீட்டை இஸ்ரேலிய படையினர் சுற்றிவளைத்துள்ளனர் என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ள அதே வேளை அவர் சுரங்கப் பாதைகளுக்குள் பதுங்கியிருக்கின்றார் என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய படையினர் ஹமாஸ் தலைவரின் வீட்டை சுற்றிவளைத்துள்ளனர் அவரால் தப்பிச் செல்ல முடியும் ஆனால் நாங்கள் அவரை கைப்பற்றுவதற்கு வெகுநாட்கள் எடுக்காது என பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். (நி-6)

## காசாவில் இராணுவ மயமாக்கப்பட்ட பாதுகாப்பு வலயம் உருவாக்கம்

## துருக்கி கண்டனம்

(துருக்கி)

காசாவில் இராணுவ மயமாக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தை உருவாக்கும் இஸ்ரேலின் திட்டத்தை துருக்கி ஜனாதிபதி வன்மையாக கண்டித்துள்ளார்.

அத்தகைய யோசனையை விவாதிப்பது கூட பாலஸ்தீனியர்களுக்கு அவமரியாதை ஏற்படுத்தும் என்றும் ரெசெப் தையிப் எர்டோகன் குறிப்பிட்டுள்ளார்.



காசாவின் எதிர்காலம் பாலஸ்தீனியர்களின் கைகளில் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# த அதிக வரி விதிப்பது
# களை உருவாக்க உதவும்

## ப்பு வலியுறுத்து

விகிதம் குறை வாக உள்ளது. வரிகளை உயர்த்துவது ஆரோக்கிய மான மக்கள்தொகைக்கு வழிவகுக்கும். மதுபான ங்கள் மற்றும் சர்க்கரை-இனிப்பு பானங்களுக்கு அதிக கலால் வரி விதிக்கப்பட வேண்டும். மது அருந்துவதால் ஆண்டுக்கு 26 லட்சம் மக்கள் இறக்கின்றனர்.

80 லட்சத்துக்கு அதிகமானோர் ஆரோக்கியமற்ற உணவை உட்கொள்வதால் இறக்கின்றனர். மதுபானங்கள், சர்க்கரை-இனிப்பு பானங்கள் மீதான வரியை அமுல்படுத்துவதீ இந்த இறப்புகளைக் குறைக்கும்.

இது இந்த தயாரிப்புகளின் பயன்பாட்டைக் குறைக்க உதவுவது மட்டுமல்லாமல், ஆரோக் கியமான தயாரிப்புகளை உரு வாக்க நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கும். ஆரோக்கிய மற்ற பொருட்களுக்கு வரி விதிப்பது ஆரோக்கியமான மக்களை உருவாக்குகிறது.

மதுபான விடயத்தில், வன்முறை மற்றும் சாலை போக்குவரத்து பாதிப்புகளைத் தடுக்கவும் வரி உதவுகிறது. மதுபானங்கள் தொடர்ந்து மலிவு விலையில் வருவது கவலை அளிக்கிறது என்று தெரிவித்துள்ளது. (நி-6)

# முகாம்களில் உள்ள மக்களையும் வெளியேறுமாறு இஸ்ரேல் எச்சரிக்கை



(ஜெருசலேம்)

காசாவில் அமைந்துள்ள தங்குமிடங்கள் மற்றும் பாடசாலைகளில் இடம் பெயர்ந்துள்ள மக்களை உடனடியாக வெளியேற இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது.

ஹமாஸ்க்கு எதிராக இஸ்ரேலிய இராணுவம் முழுசக்தியுடன்செயற்பட்டு வருவதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் எகிப்திற்குள் நுழைவதே பாலஸ்தீனியர்களுக்கு சாத்தியமான வழி என்றும் தற்போதைய சூழ்நிலையில் இது மிகவும் கடினமானது என்றும் கூறப்படுகின்றது.

கடந்த இரண்டு நாட்களாக ரஃபா எல்லை மூடப்பட்டுள்ள அதேநேரம் முறையான ஆவணங்கள் இருப்பவர்கள் கூட எகிப்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 1.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் முதலில் காசாவின் மத்திய பகுதிக்கும் பின்னர் கான் யூனிஸ்க்கும் தற்போது ரஃபாவிற்கும் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பிரதேசசபைக்கு சொந்தமான கடைகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி மனு கோரல் அறிவித்தல்

**கேள்வி விண்ணப்ப விநியோக காலம்: 08.12.2023 ஆம் தொடக்கம் 21.12.2023 வரை**
**அலுவலக நாட்களில் மு.ப.9.00 தொடக்கம் பி.ப 3.00 வரை**

**கேள்வி மனுக்கள் ஏற்கும் இறுதித் திகதி :- 22.12.2023 மு.ப 10.00 மணிவரை**

**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 22.12.2023 மு.ப 10.30 மணிக்கு**

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கைதடி பொதுச்சந்தைக்கு அருகில் கைதடி மானிப்பாய் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சாவகச்சேரி பிரதேசசபைக்கு சொந்தமான கீழ்த் தளத்திலான கடைத்தொகுதி இரண்டும் மேல் தளத்திலான கடைத்தொகுதி இரண்டும் வாடகைக்கு விடுவதற்கான கேள்வி மனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்ப விநியோக காலத்தில் குறித்த கடைகளுக்கான தனித்தனியான கேள்வி விண்ணப்பங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரியிலுள்ள சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளித்து கேள்விமனுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வி விண்ணப்பங்களை பெற விரும்புபவர்கள் தத்தமது தேசிய அடையாள அட்டை, கிராம சேவகரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மற்றும் குடும்ப வதிவிட அட்டை ஆகிய வற்றின் மூலப்பிரதியையும் நிழற்பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். (நிழற்படப் பிரதிகள் உறுதிப்படுத்திய பின்னர் மூலப்பிரதிகள் மீளப்பெற்றுக்கொள்ளலாம்)

கேள்வி மனுக்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம்"** என்ற விலாசத்திற்கு நேரடியாக/தபாலிலும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கு நேரடியாக/பதிவுத் தபாலிலும் அனுப்பிவைக்க வேண்டும். அத்துடன் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி/இணைப்பிரதி கடைத்தொகுதி இலக்கம் தெளிவாக் குறிப்பிடப்படல் வேண்டும். **22.12.2023** இற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவித காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எந்தவொரு கேள்வி பத்திரங்களையும் எந்தவொரு கட்டத்திலும் எதுவித காரணம் குறிப்பிடாது முழுவதுமாகவோ பகுதியளவாகவோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதம் பெற்றுக் கொண்ட திகதியிலிருந்து 07 (ஏழு) நாட்களுக்குள் கேள்வித் தொகையின் முழுத்தொகை யையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். இதர மேலதிக விபரங்கள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கங்களை அலுவலக நேரத்தில் சாவகச்சேரி பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

| கடை இலக்கம் /விபரம் | அளவு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி மனு வைப்புப் பணம் (மீளளிக்க கூடியது) | கேள்வி விண்ணப்ப கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| GF- 5B (கீழ்த்தளம்) | 276 sq ft | 2,000,000.00 | 4,000.00 | 20,000.00 | 2,000.00 |
| GF- 5C (கீழ்த்தளம்) | 276 sq ft | 2,000,000.00 | 4,000.00 | 20,000.00 | 2,000.00 |
| UF- 5D (மேல்த்தளம்) | 276 sq ft | 1,500,000.00 | 3,500.00 | 15,000.00 | 2,000.00 |
| UF- 5E (மேல்த்தளம்) | 276 sq ft | 1,500,000.00 | 3,500.00 | 15,000.00 | 2,000.00 |

**செயலாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை.** (C-7837) **08.12.2023**

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2983

### நிலாகரன்



அழகிற்கும் நிறத்திற்கும் சம்பந்தம் இல்லை...
பணத்திற்கும் பண்பிற்கும் சம்பந்தம் இல்ல்லை...
ஆனால் ஒழுக்கத்திற்கும் வளர்ப்பிற்கும் சம்பந்தம் உண்டு.


### சதுர்சனா




### தனுஷ்கர்




### டயானா




### புகழினி




### கிசானி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கு மக்களுக்கு தீர்வொன்றை வழங்குங்கள்

## சஜித் கோரிக்கை

**(கொழும்பு) வடக்கு- கிழக்கு மக்களுக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.**



பாராளுமன்றில் இன்று இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலகத்துக்கு நல்லிணக்கம் தொடர்பாக எடுத்துக்கூறாமல் நாட்டிலும் அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் இவ் வருடத்தின் பெப்ரவரி மாதத்திற்குள் வடக்கு கிழக்கில் காணப்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என கடந்த வருடம் ஜனாதிபதி தெரிவித்திருந்தமையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

வடக்கு- கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களும் ஏனைய பகுதி வாழும் மக்களும், ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். (நி-6)

# வவுனியாவில் வாள்வெட்டு இருவர் மருத்துவமனையில்

(குருமன்காடு)

வவுனியா, ஓயார்சின்னக்குளம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓயார்சின்னக்குளம் பகுதிக்கு இரவு வாகனம் ஒன்றில் மது போதையில் சென்ற குழுவினர் அங்கு நின்ற இருவர் மீது துரத்தித் துரத்தி வாளால் வெட்டியதனால் ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்கள் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். தாக்குதலை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-250)

# பரந்தனில் விபத்து இளைஞன் படுகாயம்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - பரந்தன் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து பரந்தன் பிரதான வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் மீது அதேபாதையில் பயணித்த பட்டாரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் மோட்டார் சைக்கி ளில் பயணித்த இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ள துடன் மோட்டார் சைக்கிள் வாகனத்திற்குள் புகுந்து கடும் சேதத்திற்குள்ளாகியது.

குறித்த இளைஞன் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் இருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு போக்குவரத்து பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (நி-6-299)

# பெண்களிற்கெதிரான வன்முறைகளை நிறுத்துங்கள்

## வவுனியாவில் விழிப்புணர்வுப் பேரணி




(குருமன்காடு)

பெண்கள் மற்றும் சிறுமிகளிற்கெதிரான வன்முறைகளை தடுக்குமாறு வலியுறுத்தி வவுனியாவில் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியில் நேற்றுக் காலை ஆரம்பமான குறித்த பேரணி கண்டி வீதி வழியாக மருத்துவமனை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து மாவட்டசெயலகம் வரைசென்றடைந்தது.

இதன்போது ஆணும் பெண்ணும் இவ்வுலகில் சமமே, பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை இல்லாது ஒழிப்போம்போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு குறித்த பேரணியில் ஈடுபட்டனர். (நி-6-250)

# பாலம் உடைந்து விழுந்ததில்

## மோ.சைக்கிளில் பயணித்த இருவர் காயம்




(முறிகண்டி)

புதிதாக அமைக்கப்பட்ட பாலம் உடைந்து விழுந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாரதிபுரம் கிராமத்தில் உள்ள வீதி ஒன்றில் அமைக்கப்பட்ட பாலமே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது.

நேற்று காலை தொழிலுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் குறித்த பாலம் உடைந்து விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாலம் உடைந்து விழுந்த நிலையில் காணப்படுவதால், மக்கள் போக்குவரத்து செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன் வெள்ள அனர்த்தம் ஏற்படக்கூடிய அபாயமும் வீதி மேலும் சேதமடையும் நிலையும் காணப்படுகின்றமையால் குறித்த பாலம் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.



ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் முல்லைத்தீவு நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட இலவச ஆங்கிலம், கணனி மற்றும் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த சிறார்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி இந்துபுரத்தில் இடம்பெற்றது. (படம்:சுபேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 348





"யாரோ முன்பின் தெரியா ஒரு வழிப்போக்கனை நம்பி நீ எதற்காக அவ்வளவு தூரம் உதவி செய்தாய்?" என்று வானதி கேட்டாள்.

"தாயே! சிலரைப் பார்த்தால் உடனே நமக்குப் பிடித்துப் போகிறது. அவர்களுக்காக உயிரையும் கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. காரணம் என்னவென்று சொல்வது? இன்னும் சிலரைப் பார்த்தால் அவர்களைக் கொன்றுவிடலாம் என்று தோன்றுகிறது. இன்றைக்கு ஒரு மனிதனை என்னோடு கொஞ்சநேரம் அடைத்து வைத்திருந்தார்கள். அவன் பேரில் எனக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. நல்ல வேளையாக சற்று நேரத்துக்கு முன்பு பழுவூர் இளைய ராணியின் ஆட்கள் வந்து அவனை விடுதலை செய்துகொண்டு போனார்கள்."

"அதுவும் அப்படியா?" என்று குந்தவை பற்களினால் தன் செவ்விதழ்களைக் கடித்துக் கொண்டாள். அவளுடைய புருவங்கள் நெரிந்தன. ஆத்திரப் பெருமூச்சு வந்தது.

"அவ்வளவு அவசரமாக விடுதலையான மனிதன் யார்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியாமல் என்ன? யாரோ பழையாறை வைத்தியன் மகனாம்."

"அப்படி என்ன அப்பா, அவன் தகாத வார்த்தைகளைச் சொன்னான்? அவனைக் கொன்றுவிடலாமா என்று அவ்வளவு கோபம் உனக்கு வந்ததாகச் சொன்னாயே?"

"கோடிக்கரையில் என் மாமன் மகள் பூங்குழலி இருக்கிறாள். அவளைப் பற்றி இவன் தகாத வார்த்தைகளைச் சொன்னான். அதனாலேதான் அவன் பேரில் எனக்கு அவ்வளவு கோபம் வந்தது. ஆனாலும் அவன் ஒரு நல்ல சமாசாரம் சொன்னபடியால் போனால் போகிறதென்று விட்டுவிட்டேன்."

"அது என்ன அவ்வளவு நல்ல சமாசாரம், அப்பா?"

"என்னுடைய நண்பன் வந்தியத்தேவனுடனேதான் இவன் கோடிக்கரைக்குப் போனான். அங்கே இந்தச் சண்டாளன் என் சிநேகிதனுக்குத் துரோகம் செய்து பழுவூர் ஆட்களிடம் பிடித்துக் கொடுத்துவிடப் பார்த்தான். அது முடியவில்லை"

"முடியவில்லையா? அப்படியானால் அந்த ஒற்றன் தப்பித்துக் கொண்டு விட்டானா?" என்று வானதியும் குந்தவையும் ஒரே குரலில் ஆர்வத்துடன் கேட்டார்கள். இதைத் தெரிந்து கொள்ளத் தானே அவர்கள் இந்தப் பாதாளச் சிறைக்குள்ளே வந்தது.

"ஆம், அம்மணி! என் நண்பன் தப்பித்துக்கொண்டு போய் விட்டான். பூங்குழலி அவனை இரவில் படகில் ஏற்றிக்கொண்டு கடலில் இலங்கைத் தீவுக்குச் சென்றுவிட்டாளாம். தேடிப் போனவர்கள் ஏமாந்தார்கள். இந்தப் பாதகனும் ஏமாந்தான்."

பெண்மணிகள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்களுடைய உள்ளத்தில் ததும்பிய மகிழ்ச்சியை அவர்களுடைய முக மலர்கள் வெளியிட்டன.

குந்தவை சேந்தன் அமுதனைப்பார்த்து, "அப்பனே! ஒற்றன் ஒருவன் தப்பித்துக் கொண்டது பற்றி நீ இவ்வளவு சந்தோஷப்படுகிறாயே? உன்னைச் சிறையில் வைத்திருப்பது சரிதான்." என்றாள்.

"தாயே! அந்தக் குற்றத்துக்காக என்னைச் சிறையில் போடுவது சரியானால், உங்கள் இருவரையும்கூட எனக்குப் பக்கத்து அறையில் போட வேண்டுமே!" என்றான்.

பெண்மணிகள் இருவரும் நகைத்தார்கள். இருளடைந்த அந்தப் பாதாளச் சிறையில், சேந்தன் அமுதனுடைய பாட்டு எவ்வளவு விசித்திரமாயிருந்ததோ, அப்படி அவர்களுடைய சிரிப்பும் அபூர்வமாக ஒலித்தது.

"நீ வெகு கெட்டிக்காரன். மிகப் பொல்லாதவன். உன்னை இங்கே வைத்திருத்தால் நீ பாட்டுப் பாடியே இங்கேயுள்ள மற்றவர்களையும் கெடுத்துவிடுவாய்.


(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிறந்த ஆயுதம்

சக்கரவர்த்தி அக்பர் சில பிரமுகர்களுடன் நந்தவனத்தைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தார். அவருடன் பீர்பாலும் இருந்தார். நந்தவனத்தில் மலர்ந்திருந்த ரோஜாப்பூக்களைப் பார்த்துப் பரவசமான அக்பர், "ஆகா! பூமியில் ஒரு சொர்க்கம் உண்டு எனில் அது இந்த நந்தவனம் தான்!" என்றார்.



"ஆம், பிரபு! நீங்கள் கூறுவது சரி!" என்று அனைவரும் ஆமோதிக்க, பீர்பால் மட்டும் மௌனமாக இருந்தார். அதைக் கவனித்த அக்பர், "பீர்பால்! சற்று முன் நான் கூறியதில் உனக்கு உடன்பாடு இல்லையா?" என்று கேட்டார்.

"பிரபு! இந்த நந்தவனத்திற்கு அழகைத் தருவது இந்த ரோஜா மலர்கள் தான். ஆனால் அழகு எங்கே உள்ளதோ, அங்கே அபாயமும் உண்டு." என்றார் பீர்பால். "ஓகோ! ரோஜாப்பூக்களில் உள்ள முட்களைக் குறிப்பிடுகிறாயா?" என்று அக்பர் கேட்டார்.

"இல்லை, பிரபு! நான் அவற்றைச் சொல்லவில்லை." என்று பீர்பால் சொல்ல, "அப்படியானால் ரோஜாச் செடிகளின் உள்ளே மறைந்திருக்கும் பாம்புகளைக் குறிப்பிடுகிறாயா?" என்று அக்பர் கேட்டார்.

"மனிதனால்தான் பாம்புகளுக்கு அபாயம். நம் காலடியோசையைக் கேட்டவுடனேயே அவை பயந்து ஓடி விடுகின்றன!" என்றார் பீர்பால்.

"பின் நீ எதைத்தான் அபாயம் என்று குறிப்பிடுகிறாய்?" என்று சலிப்புடன் அக்பர் கேட்க, "பிரபு! அபாயம் என்பது அழகை மட்டுமல்ல வலிமை, செல்வம், புகழ் ஆகிய அனைத்தையும் அபாயம் சூழ்ந்து உள்ளது.

தாங்கள் பாரதத்தின் மிக வலிமை பொருந்திய, மிகப் புகழ்பெற்ற, சகல செல்வங்களையும் ஒருங்கே பெற்ற சக்கரவர்த்தி. ஆனால், மேற்கூறிய விஷயங்களினால், அண்டை ராஜ்யத்து மன்னர்கள் தங்கள் மீது பொறாமை கொண்டுள்ளனர். தங்களை வீழ்த்தி வெற்றிவாகை சூட சதித் திட்டம் இட்டவாறு உள்ளனர்.

அதனால்தான், பூலோக சொர்க்கம் என்று ஒன்று இருப்பதாக நான் எண்ணவில்லை" என்றார்.

பீர்பாலின் சொற்கள் அக்பரை சிந்திக்கத் தூண்டின. மறுநாள் சபையில் அக்பர், "திடீரென்று ஒருவனை அபாயம் சூழ்ந்தால் அவனுடைய தற்காப்புக்காகப் பயன்படும் சிறந்த ஆயுதம் எது?" என்று சபையோர்களை நோக்கி ஒரு கேள்வி கேட்டார்.

"வாள்!" என்றார் ஒருவர். "இல்லை" என்று மறுத்த பீர்பால், சில சமயங்களில் வாள் பிடித்த கரம் செயலற்றுப் போவதுண்டு." என்றார். "எதிரி மீது தொலைவிலிருந்தே குறிபார்த்து ஈட்டியை வீசுவதன் மூலம் அபாயத்திலிருந்து தப்பலாம்." என்றார் மற்றொருவர்.

"பதற்றத்தில் ஈட்டியின் குறி தவறினால், அது பயன்படாது" என்றார் பீர்பால். "சரிதான்! வாள், ஈட்டி, என்று எந்த ஆயுதமுமே சரியில்லை என்றால் எதுதான் ஆபத்தில் பயன்படும்?" என்று அக்பர் கேட்க, "சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிந்தித்து செயற்படும் நமது அறிவே சிறந்த ஆயுதம் ஆகும்!" என்றார் பீர்பால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.

~ காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கற்றவர்கள் கயவர்களாயின் இந்த நாடு எங்ஙனம் உருப்படும்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஒரு முறை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உரையாற்றினார்.

அந்த உரையில் "கற்றவர்கள் கயவர்களாக இருந்தால் நாடு உருப்படாது" என்றார்.

உண்மை. கற்றவர்கள் எப்போதும் நல்லவர்களாக, நேர்மையானவர்களாக, வர்க்க பேதமற்றவர்களாக, அனைத்து மக்களையும் சமமாகப் பார்க்கின்றவர்களாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் அவர்களின் கல்வி மனித சமூகத்துக்குப் பயனுடையதாக இருக்கும்.

மாறாக கற்றவர்கள் கயவர்களாக இருந்தால் அவர்கள் எவ்வாறெல்லாம் தீங்கு இழைக்க முடியுமோ அதையெல்லாம் செய்வதற்கு தாம் கற்ற கல்வியைத் துணையாக்குவர். அதனாலேயே கற்றவர்கள் கயவர்களாக இருந்தால் நாடு தாங்காது என்றார் குன்றக்குடி அடிகளார்.

உண்மை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தொடர்ந்தால், விடுதலைப் புலிகள் மீண்டும் உயிர்த்தெழுவர் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி நீடிப்பது நீடிக்காமல் போவது என்பது நாட்டு மக்களைப் பொறுத்தது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி நீடித்தால் விடுதலைப் புலிகள் மீண்டும் உயிர்த்தெழுவர் என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருப்பதுதான் இங்கு கவனத்துக்குரிய விடயம்.

அதாவது பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டவர்.

பின்னர் சந்திரிகாவுக்குத் துரோகம் இழைத்து மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்தார்.

மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து அவர்களின் அத்தனை திருக்கூத்துக்களுக்கும் திருகுதாளம் போட்டார்.

ஈற்றில் ராஜபக்ஷ தரப்பு பொதுமக்களால் துரத்தப்பட்டபோது, அவர்களுக்கும் துரோகம் இழைத்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இப்போது வெற்று வெறிதாகிய நிலையில் நின்று கொண்டு, ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளித்தைலம் வைக்க முற்பட்டுள்ளார்.

இங்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கதைப்பது போன்ற பேராசிரியர் பீரிஸின் உள்நோக்கமெல்லாம் விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்கவுள்ளனர் என்ற கருத்துருவாக்கத்தை சிங்கள மக்களிடையே ஏற்படுத்தி, அதனூடு தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டி விடுவது தான்.

இதைத்தான் கற்றவர்கள் கயவர்களாக இருந்தால், இந்த நாடு தாங்காது என் குன்றக்குடி அடிகளார் கூறிவைத்தார் போலும்.

என்ன செய்வது இன ஒற்றுமையை ஏற்படுத்தி நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட வேண்டிய ஒரு பேராசிரியர் இல்லாத புலிகள் மீண்டும் உயிர்த்தெழுவர் எனக்கூறி, இன வன்மத்தை தூண்டுகின்ற கயமைத்தனத்தைச் செய்யும்போது இந்த மண் எங்ஙனம் உருப்பட முடியும்.

### முல்லையில் 130 நபர்களுக்கு எதிராக

# வன ஜீவராசிகள் திணைக்களம் நீதிமன்றில் வழக்கு தாக்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரியல் வயல் சுண்டிக்குளம் பகுதிகளை அண்மித்துள்ள சுமார் 130 நபர்களுக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1908 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் பயிர் செய்து வாழ்ந்துவரும் நிலையில் குறித்த இடத்தில் உள்ள மக்கள் தம் காணிகளை துப்பரவு செய்தமையை அடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அது தமக்குரிய காணி என முல்லைத்தீவு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

சுண்டிக்குளம் தேசியா பூங்காவிற்குள் உட்சென்றமை, தாவரங்களை வெட்டி வெளியாக்கியமை, காணிகளை வெளியாக்கியமை, பாதைகளை அமைத்தல் மற்றும் பாதைகளை பயன்படுத்தியமை போன்ற காரணங்களை முன்வைத்து குறித்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த வழக்கானது நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் சட்டத்தரணி சி.தனஞ்சயன் கருத்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்திலே சுண்டிக்குளம் பிரதேசத்தை ஒட்டிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு எதிராக வன ஜீவராசிகள் திணைக்களம் கிட்டதட்ட 130 நபர்களுக்கு எதிராக வழக்குகளை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே தாக்கல் செய்துள்ளார்கள்.

குறித்த வழக்கிலே அத்துமீறி குறித்த மக்கள் குடியிருந்ததாகவும், தாவரங்களை அழித்ததாகவும் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். சுண்டிக்குள பிரதேசத்தில் இருந்து ஆறு கிலோ மீற்றர் தூர தொலைவில் இருக்கும் மக்களுக்கு எதிராகவும், இறந்த மக்களுக்கு எதிராகவும், ஒரு நபருக்கு எதிராகவும் மூன்று நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

'வன ஜீவராசிகள் திணைக்களத்தினர், நில அளவை திணைக்களத்தினர் சரியான வரைபடங்களையோ, எந்த காலப் பகுதியில் அது சரணாலயமாக இருந்தது என்பதற்கான எந்த வித தகவல்களும் இல்லாத நிலையில் போலியான விசாரணையை நடாத்தி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

நேற்றையதினம் நிதிமன்றிலே இவ்வழக்கானது அடிப்படை ஏதுகள் அற்ற நிலையிலேயே கொண்டுவரப்பட்டதும், மக்களின் நில உரிமையினை பறிக்கும் அரசியல் நோக்கத்திற்காகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கலாம் என்பதையும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தோம். மேலும் மேலதிக விசாரணைகளை வழக்கு தொடுநர் தரப்பு செய்ய வேண்டும் எனவும் நீதவானால் பணிக்கப்பட்டிருந்தது. குறித்த வழக்கானது அடுத்த வருடம் வைகாசி மாதம் இரண்டாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-7,299)

### தெல்லிப்பழையில் வாள்வெட்டு

# கைதான சந்தேகநபர்கள் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பகுதியில் வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான நான்கு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் கடந்த திங்கட்கிழமை வாள் வெட்டு சம்பவம் இடம்பெற்றது. அதில் இளைஞன் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

வன்முறை சம்பவத்தில் ஈடுபட்ட கும்பல் ஹயஸ் ரக வாகனத்தில் தப்பி சென்றபோது , மல்லாகம் பகுதியில் பொலிஸார் வாகனத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடாத்திய போதிலும் கும்பல் வாகனத்துடன் தப்பிச் சென்று இருந்தது.

அந்நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், நேற்று முன்தினம் புதன்கிழமை புதுக்குடியிருப்பு பகுதியில் பதுங்கியிருந்த மூன்று சந்தேகநபர்களை கைது செய்தனர். அத்துடன் அவர்கள் பயணித்த வாகனத்தையும் மீட்டு இருந்தனர்.

அதேவேளை மேலும் ஒரு சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட நிலையில் , சம்பவம் தொடர்பில் கைதான நான்கு சந்தேகநபர்களும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மேலும் மூன்று சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்களை கைது செய்வதற்கான தீவிர நடவடிக்கைகளில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிபடையினர் ஈடுபட்டுள்ளனர். (ம-7,33)

# பண்பாட்டு பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்தும் பண்பாட்டு பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கு பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ் அவர்களும் கௌரவ விருந்தினராக யூனியன் கல்லூரி அதிபர் தில்லையம்பலம் வரதன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வலி. வடக்கு பிரதேசத்தினை சார்ந்த பல கலைஞர்களின் திறமைகள் இவ் நிகழ்வில் அரங்கேற்றப்படவுள்ளதுடன் கௌரவிப்பு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது.

(ம-7,33)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ் பிரதேசத்தில்** அண்ணாமலையார், ஸ்ரீராகவேந்திரா என்ரபிறைசஸ், எவர்கிறீன் அச்சகம், ஹரிகணன் பிறைவேட் லிமிரட், அரசடி வீதி -சீனியர்வீதி, ஐயனார் கோவிலடி, மனோகரா நாவலர் வீதி, மாவடி, தட்டாதெரு கே.கே.எஸ் வீதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அஸ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை-காத்தான் கோட்டம், தெய்வேந்திரம் அரிசி ஆலை, யாழ் ஐஸ்கிறீம், சியாம் அரிசி ஆலை (சிவா அரிசி ஆலை), குகன் நகர், குழுமாட்டு சந்தி, மகாறம்பைகுளம், மறக்கறம்பளை-கணேசபுரம், பட்டைகாடு, வேப்பங்குளம் 6 ஆவது வீதி, பட்டாணிச்சூர் புளியங்குளம், அவறந்துலாவ, நவகம்மானே, பாவற்குளம், பழையனூர், பாவற்குளம், இராஜேந்திரகுளம், சூடுவெந்தபுலவு கோபுரம், சூடுவெந்தபுலவு, ட்ராக் 07 -பாவற்குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

JSAC


"பெண்களுக்கெதிரான வன்முறை ஒரு கலாச்சாரம் அல்ல, அது ஒரு குற்றம். சமத்துவம் என்பது உடனடியாகப் பெற முடியாததொன்று, அதற்கு நாம் இப்போதிலிருந்தே போராட வேண்டும்."

16 2023

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



09

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

தகவல் அறியும் சட்டம் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் பொது அதிகாரசபைகளிடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதில் மக்களுக்கு சவால்கள் காணப்பட்டன. அதிகமான பொது அதிகாரசபைகள் தகவல்களை வழங்க மறுத்தன. அவ்வேளைகளில் பிரஜைகளால் ஆணைக் குழுவுக்கான மேன்முறையீட்டினை மேற்கொண்டு, தங்களுக்கான தகவல்களை பெற்றுக்கொண்டு தங்களது தேவைகளை பூர்த்தி செய்ததோடு ஊழல் எதிர்ப்பிற்கு தங்களது பங்களிப்பினையும் வழங்கினர்.

தகவல் அறியும் ஆணைக்குழுவானது 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு சுயாதீன சட்டபூர்வ ஆணைக்குழுவாகும். ஆணைக் குழுவானது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை வலுப்பெறச் செய்வதற்கான பல்வேறு முயற்சிகளை செய்கின்றது. அந்த வகையில் தகவல் அறியும் உரிமையை மேற்பார்வையிட்டு செயற்படுத்தும் ஒரு நிறுவனமாகவும் அமையப் பெற்றுள்ளது.

பொதுஅதிகாரிகள் மற்றும் தகவல்களைக் கோரி விண்ணப்பிக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளுக்கு பயனுள்ள தீர்ப்புக்களை வழங்கி செயற்படுத்தும் ஒரு நிறுவனமாகவும் தகவல் அறியும் ஆணைக் குழு செயற்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. பொதுமக்களுக்கு இந்த ஆணைக்குழு ஒரு பலமாகவே செயற்படுகின்றது. அத்துடன் பொதுநலன் மேலோங்கி காணப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பொதுமக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று செயற்படுவதும் இந்த ஆணைக் குழுவின் சிறப்பம்சமாகும்.

இந்தஆணைக்குழுவைப் பொறுத்தவரை அரசியலமைப்பு சபையின் பரிந்துரைகளின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவரையும் நான்கு உறுப்பினர்களையும் கொண்டமைந்ததாகும். இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள், ஊடக நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களில் ஆழ்ந்த அனுபவமுள்ளவர்கள் ஆணைக் குழுவுக்கு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுவார்கள்.

சட்ட ஏற்பாடுகள் எவ்வளவு இறுக்கமாக இருந்த போதிலும் சுதந்திரமான நீதித்துறை மற்றும் விழிப்புணர்வுள்ள மக்கள் செயற்பாடுகள் இன்றி இலஞ்ச வலையை அறுத்தெறிவது சாத்தியமாகாது.

## இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு

1994 ஆம் ஆண்டில் அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இச்சட்டமானது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான நிரந்தர ஆணைக் குழுவினை ஸ்தாபித்ததுடன், இலஞ்ச சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தும் சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு வழக்கிடுதல் நடவடிக்கையினை மேற்கொள்கின்றது. இன்று இலஞ்சம் மற்றும் ஊழலுக்கெதிரான சட்டரீதியான நிலையான சுயாதீன அமைப்பாக விளங்குகின்றது.

முதலாவது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் 1994 ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமானது. இவ்ஆணைக்குழுவில் மூன்று உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதுடன் அவர்களில் இருவர் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளாதல் வேண்டும் என்பதுடன் ஒரு உறுப்பினர் குற்றவியல் விசாரணை மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிறந்த அனுபவம் மிக்கவராதல் வேண்டும்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் சுயாதீனத்தினை நிலைநாட்டும் வகையில் ஆணைக் குழுவின் உறுப்பினர்களின் நியமனமானது அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவதுடன் பதவி நீக்கமானது அவர்களின் தவறான நடத்தை அல்லது தகைமையீனம் காரணமாக பாராளுமன்றத்தினால் மாத்திரமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 5 வருடங்கள் பதவி வகிக்க முடியுமாவதுடன் மீண்டும் தெரிவு செய்யப்பட தகுதியற்றோராவர்.

ஆணைக்குழுவானது எந்தவொரு அமைச்சு, திணைக்களத்திற்குட்படாததாகும். ஆணையாளர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து செயற்படுவர். இவர்களின் சம்பளமானது நேரடியாக திரட்டு நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது.

ஆணைக்குழு சட்டமானது பணிப்பாளர் தலைமையதிபதியின் நியமனம் தொடர்பில் விளக்குகின்றது. பணிப்பாளர் தலைமையதிபதியானவர் ஆணைக்குழுவின் பிரதான நிதி மற்றும் நிர்வாக அலுவலராக இருப்பதுடன் புலனாய்வு மற்றும் வழக்கிடுதல் நடவடிக்கைகளுக்கான அவசிய ஏற்பாடுகளை வழங்கும் கடப்பாடுடையவராவார்.

ஆணைக்குழுவானது சட்டப்பிரிவு, விசாரணைப்பிரிவு மற்றும் நிர்வாகப்பிரிவினை உள்ளடக்கியது. ஆணைக்குழுவானது பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழ் சட்ட அலுவலர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வுகளை நடத்துகின்றது. சட்ட அலுவலர்களை பதவியில் அமர்த்தும் அதிகாரம் மற்றும் ஒழுக்காற்று அதிகாரம் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

புலனாய்வாளர்கள் இலங்கை பொலிஸில் இருந்து நியமிக்கப்படுவதுடன் ஆணைக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களாக பணிபுரிகின்றனர். புலனாய்வும் வழக்கிடுதல் நடவடிக்கையும் ஆணைக் குழுவின் விஷேட அனுமதியுடன் மாத்திரமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் ஆணைக் குழுவானது உண்மையான சுயாதீனத்தை நிலைநாட்டும் வகையில் புலனாய்வாளர்கள் ஆணைக்குழுவின் அலுவலர்களாக செயற்படுவது அத்தியவசியமாகும்.

மேலதிகமாக ஆணைக்குழுவானது விஷேட தேர்ச்சி பெற்ற அலுவலர்களை இணைக்கவுள்ளது. குறிப்பாக கணக்காளர்கள், நில அளவியலாளர்கள், தகவல் தொழில் நுட்ப நிபுணர்கள் ஆகியோரினை உள்ளடக்கிய புலனாய்வுப்பிரிவினை நிறுவுதல்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 5 இன் பிரகாரம் ஆணைக்குழுவானது தனது பணிகளை நிறைவேற்றுவதில் பல்வேறு தத்துவங்களையுடையதாக விளங்குவதுடன் குறிப்பாக வங்கி நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை பெறுதல், கணக்குகளை முடக்குதல் மற்றும் கடவுச்சீட்டுக்களை கையகப்படுத்தல் முதலான பல்வேறு சிறப்புத் தத்துவங்களையுடையதாக விளங்குகின்றது.

அத்துடன் ஆணைக்குழு சட்டத்தின் 19(1) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழு உறுப்பினர்கள் அலுவலர்கள் ஆணைக் குழுவின் செயற்பாடுகளின் நிமித்தம் நல்லெண்ணத்துடன் தம்மால் செய்யப்பட்ட, செய்யாது விடப்பட்ட எத்தகைய செயலுக்கு எதிராகவும் வழக்கு நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படுவதில் இருந்து விடுபாட்டுரிமை அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆணைக்குழுவானது இலஞ்சம் ஊழல் மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டம் விரிவுபடுத்தவுள்ளதுடன் அது அனைத்துவிதமான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும் வழக்கிடுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டதாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான சமவாயம் ஒக்டோபர் 2003 ஆம் திகதி ஐ.நா பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேலும் 14 டிசெம்பர் 2005ஆம் திகதி முப்பது நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் குறித்த சமவாயம் நடைமுறைக்கு வந்தது.

இன்று ஐக்கிய நாடுகள் சபையின் பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் இச்சமவாயத்தின் பங்காளிகளாக இருப்பதுடன், 2004 மார்ச்சில் இச்சமவாயத்தில் அங்கம் வகிக்கும் முதன்மை நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். ஊழல் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும் ஊழலுக்கு எதிராக போராடுவதற்கும் ஊழலைத் தவிர்ப்பதற்கும் டிசெம்பர் 9 ஆம் திகதியை சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினமாக பொதுச் சபை அறிவித்துள்ளது.

சென்ற வருட சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து நேர்மையான உத்தியோகத்தர்களுக்கான நற்சான்றிதழ் வழங்கும் நிகழ்வை 2022 டிசெம்பர் 9 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

30.11.2022 ஆம் திகதி வரை ஊழல் தடுப்பு பிரிவு 125 இற்கும் அதிகமான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அரச உத்தியோகத்தர்களுக்காக நடத்தியுள்ளது. அவற்றில் நாடளாவிய ரீதியில் 60 இற்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்காகவே நடத்தப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்ஷக்களை...

நெருக்கடிக்கு முகம்கொடுக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரே இலங்கை பொருளாதார ரீதியில் பின்னடைய காரணமானவர்கள் என வலியுறுத்தி குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ம-7)

## தனியார் துறை...

றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரச துறையினரின் ஊதிய அதிகரிப்புடன் சேர்த்து தனியார் துறையினரின் ஊதியத்தையும் அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி, தனியார் துறையில் குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரிப்பதற்கான யோசனை அமைச்சரவையின் ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தனியார் துறையின் ஊதியம் அதிகரிப்பு குறித்து அறிவிக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## முள்ளிவாய்க்...

தெரியவருகையில்,

இறுதி யுத்த காலத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் முள்ளிவாய்க்காலில் விடப்பட்ட நிலையில் அது படையினரின் பிடியில் இருந்து காணாமல் போயிருந்தது.

மோட்டார் சைக்கிளை உரிமையாளர் நீண்ட காலம் தேடியும் கிடைக்கவில்லை.

இந்தநிலையில் 14 ஆண்டுகளின் பின்பு கடத்தல் சம்பவம் ஒன்றுடன் இந்த மோட்டார் சைக்கிள் தொடர்புபட்டு மீட்கப்பட்டுள்ளதால் உரிமையாளரை இன்று 8ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு காலி நீதிமன்றம் மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இறுதி யுத்தத்தின்போது தமிழ் மக்களால்முள்ளிவாய்க்காலில்கைவிடப்பட்ட பல நூறு வாகணங்கள்படையினரின் துணையுடன் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்று ஏற்கெனவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தமிழர்களின்...

13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியா இலங்கையிடம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களின் உரிமையை பாதுகாப்பதற்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## நினைவேந்தலை...

விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு தென்னிலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் நீதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னங்களைப் பயன்படுத்துபவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் மாதிரிக் காட்சியளிப்பவர்கள், பிரபாகரனின் படத்தைப் பயன்படுத்துபவர்கள் கட்டாயம் கைது செய்யப்படுவார்கள்.

அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். அவர்களுக்கு மன்னிப்புக் கிடையாது. சட்டம் தன் கடமையைச் செய்யும். நீதிமன்றம் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாகச் செயற்படும்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, இலங்கையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு என்பதை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## புலம்பெயர்...

கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மஹாநாயக்க தேரர்களையும் சந்தித்து கலந்துரையாட உள்ளதுடன், சிவில் சமூகத்தினரையும் சந்திக்கவுள்ளனர்.

இதன் பிரகாரம் தேசிய சமாதான பேரவையுடனான சந்திப்பு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதேவேளை, அவர்கள் வடக்குக்கு விஜயம் செய்யவுள்ளதுடன் அரசியல் மற்றும் சிவில் பிரதிநிதிகளை சந்தித்து நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாட உள்ளனர்.

புலம்பெயர் இலங்கையர்கள் நாட்டின் அபிவிருத்தி திட்டங்களில் பங்களிப்பு செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தது.

குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின்போது ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் பின்னர் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை, இலங்கையின் உள்ளக அபிவிருத்தித் திட்டங்களுக்குள் உள்வாங்கும் இலக்கினை ரணில் துரிதப்படுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் அதற்கானதொரு அலுவலகத்தை ரணில் ஸ்தாபித்துள்ளார்.

அந்த அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகமாக இலங்கையின் மூத்த இராஜதந்திரிகளின் ஒருவரான வீ.கிருஸ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். அந்த அலுவலகத்தின் ஊடாகவே உலக தமிழர் பேரவை அரசாங்கத்தை அணுகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ராஜ...

தேவையும் எனக்கு இல்லை" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாவீரர் தின நிகழ்வு தொடர்பிலும், நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்து ராஜபக்ஷ தரப்புக்கு எதிராக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பிலும் ஜனாதிபதிக்கு எதிராக எதிரணியினர் முன்வைத்து வரும் விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "போரில் மரணித்த தமது சொந்தங்களைத் தமிழர்கள் நினைவேந்தும் போது அதற்கு புலி முத்திரை குத்த முடியாது.

அதேவேளை, நினைவேந்தல் என்ற பெயரில் நீதிமன்றக் கட்டளைகளை மீறி புலிகளை கொண்டாடுபவர்களை கைது செய்யாமல் விடவும் முடியாது. இதற்குள் அரசியல் ஆதாயம் தேட சிலர் முற்படுகின்றார்கள்.

புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நோக்கம் எனக்கு இல்லை. சிலரின் சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களுக்கு என்னால் அவர்களின் பாணியில் பதிலளிக்க முடியாது எனக் கூறியுள்ளார். (ம-7)

## தாமரை கோபுரத்தில் சுழலும் உணவகம்

(கொழும்பு)

கொழும்பு தாமரை கோபுரத்தில் முதலாவது சுழலும் உணவகத்தை எதிர்வரும் 9ஆம் திகதி திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிட்ரஸ் ஹோட்டல் குழுவுடன் இணைந்து இந்த உணவகம் பொது மக்களுக்காக திறக்கப்படவுள்ளது.

கொழும்பு தாமரைக் கோபுரத்தில் உள்ள சுழலும் உணவகம், தெற்காசியாவின் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள முதல் சுழலும் உணவகமாக கருதப்படுகிறது. (ம-7)

## சாவகச்சேரியில்...

போதே மேற்படி மோட்டார் ஷெல் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு வெடிபொருளை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-7,30)


லக்கி 7 VIP
திகதி 2023.12.07
சீட்டிழுப்பு இலக்கம் 0147
L 1 9 9 2 0 2 L

தன நிதானய
திகதி - 2023.12.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1351
S 17 29 38 53 S
38216

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3563
சீட்டிழுப்பு திகதி 07.12.2023
F 23 26 51 63
F
52851

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.07
சீட்டிழுப்பு இலக்கம் 0630
கடகம் 04 23 45 48 கடகம்
39024 16

மஹஜன சம்பத
திகதி 2023/12/07
சீட்டிழுப்பு இலக்கம் 5321
T 3 6 4 0 9 6

மெகா பவர்
திகதி 07/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1669
D 03 08 10 68 73
08309

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 07.12.2023 வெற்றி வாரம் 029 வர்ணம் ஊதா
Y 2 5 8 0 0 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,274,351.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2295 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.12.07 தினம் வியாழக்கிழமை
03 06 56 68 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,181,484/-

சனிதா
திகதி 2023.12.07 வெற்றி வாரம் 4456 வர்ணம் சிவப்பு
55 65 66 71 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,122,764.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4007 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.07 தினம் வியாழக்கிழமை
26 30 48 51 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,179,884/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 29 07 27 32 47
1471
2023.12.07 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 474,443,144.20

வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,411,200/-
வெற்றி வாரம்: 2121
சீட்டிழுப்பு திகதி: 2023.12.07
ADA KOTIPATHI
36 51 57 59 Y


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை ஆரம்பம்
புதிய பிரிவு
**A/L - 2025**
**கலை, வர்த்தகம்**
காலை 9 மணி
**DMI Jaffna**
தொடர்பு :
D.Sam - 077 848 0604
(18132)



**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
(C-7844)
**V2 TRAVELS**
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



யாழ். நகரில் மிக நீண்ட கால அனுபவம் கொண்ட ஆசிரியர்களின் ஒருங்கிணைவில்....
**NCAC**
(NAVALAR COLLEGE OF ARTS & COMMERCE)
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
**A/L - 2025**
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் : 09.12.2023 சனிக்கிழமை காலை 8.00 மணி

| கலைப்பிரிவு | | வர்த்தகப்பிரிவு |
|---|---|---|
| தமிழ் | A.K.கீர்த்திராஜன் | கணக்கீடு : S.T.ரூபன் |
| அளவையியல் | P.கமல் | பொருளியல்: N.லிஜிதன் |
| அரசியல் | K.கபில் | வணிகக்கல்வி : K.மதிஷன் |
| புவியியல் | S.P.கரன் | |
| இந்துநாகரிகம் | P.செல்வதி | |
| வரலாறு | B.சுதாகரன் | |
| ஊடகம் | M.கோனேஸ் | |

அனுமதிகள் இன்று முதல்..
(18135)
தொடர்புகளுக்கு - 077 459 8440



**சிங்களம்**
◆ தரம் 6 – O/L வரை
◆ உயர் கல்வி கற்போர்
◆ தொழில்புரிவோர்
By **S.A.JAYASRI**
(18118)
**NEWTON** GROUP CLASSES
No.18/18, Wyman Road, Nallur.
☎ -0777 923 653



**காணி விற்பனைக்கு**
GOLDEN Real Estate
**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**
■ கைதடிச் சந்தியில் இருந்து 250m தூரத்தில்
■ வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம் ■ 20 அடி பாதை
■ A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
■ நன்னீர் ஊற்று நிலம்
■ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
■ சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
■ வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
■ வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
■ சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
■ பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
(18140)
**071 173 3911,**
**076 853 5022, 076 213 7239**



**தரம் 6 (2024)**
**கணிதம்**
ஆசிரியர்
திரு.T.அற்புதராஜா
புதிய பிரிவு
ஆரம்பம் : 09.12.2023
சனி 3.00 P.m
இல.202, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(18128)
T.P : 077 722 2478



வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்
**A/L - 2023**
மாணவர்களுக்கான...
**புவியியல் கருத்தரங்கு**
வளவாளர் –
**N.பாபு**
டிசம்பர் - 15,16,17,18 ஆம் திகதிகளில்
ஆரம்பம் - 15.12.2023
வெள்ளி 2 Pm
(C-7827)
**DMI** ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
✆ -077 936 5087


# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்




கடந்த 23.10.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

## அமரர் மனோகரன் அரியமலர்

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 02.12.2023 சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், சபிண்டீகரண கிரியைகள் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்திலும் இனிதாக நடைபெற்றது.

இன்றையதினம் 08.12.2023 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"கதிரமலைவாசம்"
புலோலிமேற்கு,
கிராமக்கோடு.

(C-7840)

தகவல்:
குடும்பத்தினர்
077 381 8605


**காணி விற்பனைக்கு**
A9 வீதியில் நெடுங்குளம் சந்தியில் இருந்து கொழும்புத்துறை செல்லும் வீதியில் தண்டவாளத்திற்கு மேற்கே செல்லும் பாதையில் கோயிலுக்கு முன்பாக உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு (C-7831)
**077 948 4582**



வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528
(18106)



**தரம் 6 - O/L**
**விஞ்ஞானம்**
Theory : B.மயூரதன் (மன்/முசலி தேசிய பாடசாலை)
Revision & Paper : P.ஸ்ரீஸ்கந்தராஜா (Retd. உதவிக் கல்விப் பணிப்பாளர்-விஞ்ஞானம்)
(18118)
**NEWTON** GROUP CLASSES
No.18/18, Wyman Road, Nallur.
☎ -077 792 3653



**கணக்காளர் பணிக்கு ஆட்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு கணனி அறிவுடைய கணக்காளர் தேவை.
தொடர்புகளுக்கு:
**070 719 5424**
K.K.S வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(18138)



**காணி விற்பனைக்கு**
**நல்லூர் கோவிலில் இருந்து 2Km தூரத்தில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**
**நிலப்பரப்பு**
● பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
● 18 அடி பாதையுடன்.
● 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
● திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
● குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
● நன்னீர் ஊற்று.
பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை
(18131)
தொடர்புகளுக்கு : ஜெயம்
**077 814 7389, 077 986 5457**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org